தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 234 | 4 Pages | 22.3.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 234 | 4 பக்கங்கள் | 22.3.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய வெல்லாம் ஒருங்கு**

**விளக்கம்:**
**ஐம்பொறிகளுக்கும்உரியஐந்துபுலன்களின் ஆசையையும் வெல்லுதல் வேண்டும், அவற்றிற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் ஒரு சேர விட வேண்டும்.**

# திருச்சியில் கலைஞர் நூலகம், அறிவுசார் மையம்: மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, மார்ச்.22

இந்து சமய அறநிலையத் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒரு கால பூஜை திட்டத்தில் இணைக் கப்பட்டுள்ள 17 ஆயிரம் கோவில் களுக்கானவைப்புநிதியினைதலா ரூ.2.50 லட்சமாக உயர்த்திட ரூ.85 கோடி மற்றும்

இத்திட்டத்தைவிரிவுப்படுத்தும் வகையில் கூடுதலாக 1,000 கோவில்களுக்கு ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ் வொரு கோவிலுக்கும் தலா ரூ.2.50 லட்சம் வீதம் மொத்தம் ரூ.25 கோடி என மொத்தம் ரூ.110 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் பி.ஜமி லாவிடம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்கி



னார். மேலும், விரிவுபடுத்தப்பட்ட1,000 ஒரு கால பூஜைத் திட்ட கோவில்க ளுக்கு அதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களிடம் ஆணைகளை வழங்கினார்.

கலைஞர் நூலகம்:

தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரையைத் தொடர்ந்து திருச்சியிலும் மாபெரும் கலைஞர் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்படும் என்று முதல்அ மைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு இறுதியில் சட்டசபையில் அறிவித்திருந்தார்.

அதன்படி, ரூ.290 கோடி மதிப் பீட்டில் உலகத்தரத்துடன் கட்டப் படவுள்ள மாபெரும் கலைஞர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத் திற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார். சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச் சியில் காணொலி வாயிலாக நூல கத்திற்கு அடிக்கல் நாட்டினார். திருச்சி கிழக்கு வட்டம், செங்கு ளம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கிராம நகரளவையில் 4.57 ஏக்க ரில் 1,97,337 சதுரடி அளவில் தரை மற்றும் 7 தளங்கள் கொண்ட நூல கம் மற்றும் அறிவுசார் மையம் அமையவுள்ளது.

## ராகுல்காந்தி மீதான அவதூறு வழக்கு விசாரணை ஏப்ரல் 3ம் தேதிக்கு தள்ளிவைப்பு




சுல்தான்பூர், மார்ச்.22

மக்களவை எதிர்க்கட்சித்தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி மீது உத்தரபிரதேசத்தின் சுல்தான்பூரில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கான சிறப்பு கோர்ட்டில் கடந்த 2018ம் ஆண்டு அவதூறு வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்தது.

இந்த வழக்கின் விசாரணை நேற்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் வக்கீல்கள் போராட்டம் காரணமாக இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க முடியவில்லை. எனவே இந்த வழக்கின் அடுத்த விசாரணை அடுத்த மாதம் (ஏப்ரல்) 3ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

முன்னதாக இந்த வழக்கில் கடந்த 2023ம் ஆண்டு ராகுல் காந்திக்கு பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்டது. எனவே அவர் கோர்ட்டில் சரணடைந்து ஜாமீன் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## காவிரி டெல்டாவில் புதிய ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு ஒப்புதல் இல்லை மத்திய அரசு தகவல்



புதுடெல்லி, மார்ச்.22

மயிலாடுதுறை எம்.பி. சுதா மக்களவையில், எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுக்காக கடந்த 2014ம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றியும், மன்னார் வளைகுடா மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களில் ஏதேனும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதா? என்றும் கேள்விகள் கேட்டு இருந்தார்.

இதற்கு மத்திய பெட்ரோலியத்துறை இணை மந்திரி சுரேஷ்கோபி நேற்று எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

2014ம் ஆண்டு முதல், மன்னார் வளைகுடாவில் எந்தவொரு ஆய்வு தொடர்பாகவும், யாருக்கும், எந்த ஒப்பந்தமும் வழங்கப்படவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தின் 3 சட்டசபை தொகுதிகள் அடங்கிய மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி உள்ளடங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் புதிய எண்ணெய் மற்றும் எரிவாயு (ஹைட்ரோ கார்பன்) ஆய்வு திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஓ.என்.ஜி.சி. நிறுவனத்துக்கு 2 ஆய்வுத்தொகுதிகள் வழங்கப்பட்டது. ஆனால் தமிழ்நாடு அரசால் பெட்ரோலிய ஆய்வு உரிமம் வழங்கப்படாததால் அது கைவிடப்பட்டது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## யூடியூப் பார்த்து தனக்கு தானே அறுவை சிகிச்சை செய்துகொண்ட நபர் மருத்துவமனையில் அனுமதி

லக்னோ, மார்ச்.22

உத்தர பிரதேச மாநிலம் விருந்தாவன் பகுதியில் உள்ள சன்ராக் கிராமத்தை சேர்ந்தவர் ராஜா பாபு. இவர் பல ஆண்டுகளாக குடல் அழற்சியால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், குடல் அழற்சி பாதிப்பிற்கான அறுவை சிகிச்சையை எவ்வாறு செய்ய வேண்டும் என யூடியூப் வீடியோக்களில் ராஜா பாபு தேடி பார்த்துள்ளார். பின்னர் அவற்றைப் பார்த்து தனக்கு தானே அறுவை சிகிச்சை செய்துள்ளார்.

அறுவை சிகிச்சைக்கு தேவையான கத்தி, ஊசி உள்ளிட்ட பொருட்களை மார்க்கெட்டில் இருந்து ராஜா பாபு வாங்கியுள்ளார். மேலும் அறுவை சிகிச்சை செய்துவிட்டு 11 தையல்கள் போட்டுள்ளார்.

ஆனால்அதன்பிறகுஅவரதுஉடல்நிலைமோசமடையதொடங்கியது. இதையடுத்து ராஜா பாபுவின் உறவினர்கள் அவரை உடனடியாக விருந்தாவன் மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். தொடர்ந்து மேல்சிகிச்சைகாக ஆக்ராவில் உள்ள மருத்துவமனையில் ராஜா பாபு அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## மத்திய அரசுக்கு எதிராக கர்நாடக ஐகோர்ட்டில் 'எக்ஸ்' நிறுவனம் வழக்கு

பெங்களூர், மார்ச்.22

எக்ஸ்' சமூக வலைதளத்தில் கருத்துகளை தடுக்க மத்திய அரசு தகவல் தொழில்நுட்ப சட்டத்தை பயன்படுத்துவதாக கூறி, கர்நாடக ஐகோர்ட்டில் அந்த நிறுவனம் வழக்கு தொடர்ந்து உள்ளது. எக்ஸ் நிறுவனம் தனது மனுவில் கூறியிருப்பதாவது: ஐ.டி., சட்டத்தில் குறிப்பாக பிரிவு 79(3)(பி) ஆகிய பிரிவை மத்திய அரசு பயன்படு`த்துகிறது. இது, ஆன்லைனில் தடையற்ற கருத்து பரிமாற்றத்தை தடை செய்வதுடன், சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவிற்கு எதிராக உள்ளது. சட்டப்பிரிவு 69ஏ விதிமுறைகளை மீறி, இணையதள உள்ளடக்கத்தைதடுக்கஐ.டி.,சட்டத்தைமத்தியஅரசுபயன்படுத்துகிறது

உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் தன்னிச்சையான தணிக்கையை விதிக்க அதிகாரிகள் 79(3)(b) பிரிவை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். பிரிவு 79(3)(b) ஐ அரசு ஒரு குறுக்கு வழியாகப் பயன்படுத்துகிறது. இதனால் உரிய ஆய்வு இல்லாமல் உள்ளடக்கத்தை அகற்ற அனுமதிக்கப்படுகிறது. தன்னிச்சையான தணிக்கையைத் தடுக்கும் சட்டப் பாதுகாப்புகளை பிரிவு 79(3)(b) நேரடியாக மீறுகிறது" என தெரிவித்துள்ளது.

## தென்காசி மாவட்டம் செங்கோட்டை சரகத்திற்கு ஆரியநல்லூர் தொடக்கப்பள்ளியில் இடிந்து விழுந்த மேற்கூரை கட்டிடம் பயன்பாட்டில் இல்லாத கட்டிடம்: கலெக்டர் தகவல்

தென்காசி மாவட்டம் செங் கோட்டை சரகத்திற்கு உட்பட்ட ஆரியநல்லூர் அரசு தொடக்கப்பள் ளியில் பயன்பாட்டில் இல்லாத கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளது. இக்கட்டிடம் மாணவ மாணவியர்கள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டில் இல்லை என்பதாலும் பள்ளிக்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வந்து செல்வதற்கு தனியாக வழி உள்ளது என்பதாலும் மேற்காணும் நிகழ்வு காரணமாக எவ்வித பாதிப்பும் ஏற் படவில்லை.

ஆசிரியர்கள் மாணவ மாணவி யர்கள் மற்றும் அலுவலக பணியா ளர்களின் நலன் கருதி பள்ளி வளா கத்தில் செயல்பட்டு வரும் செங்கோட்டை வட்டார கல்வி அலுவலகத்தினை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றும்படி செங்கோட்டை வட்டார கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது என மாவட்ட ஆட்சித்த லைவர் திரு.கமல்கிஷோர், இ.ஆப, அவர்கள் தெரிவித் துள்ளார்.

## 3 வது நாளாக விசைத்தறியாளர்கள் போராட்டம்: தேக்கத்தில் இருக்கும் காடா துணிகளை என்ன செய்யவது?



திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களிலுள்ள சோமனூர், பல்லடம், காரணம்பேட்டை, தெக்கலூர், அவிநாசி மற்றும் மங்கலம் உள்ளிட்ட இடங்களில் விசைத்தறி தொழில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக இருந்து வருகிறது.இந்த பகுதியில் சுமார்1,00,000விசைத்தறிகள்மற்றும் 10000 விசைத்தறி கூடங்கலுள்ளன.

இந்த தொழில் மூலமாக நேரடியாக வும், மறைமுகமாவும் பல்லா யிரக்க ணக்கானோர் பணியாற்றி வருகிறார் கள்.இந்நிலையில் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியு றுத்தி நேற்றுமுன்தினம் முதல் காலவ ரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டு வருகின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தை முன் னிட்டு விசைத்தறி கூடங்கள் அனைத் தும் மூடப்பட்டு அந்த பகுதியே தொழிலாளர்களின்றி காணப்பட்டது.

மேலும் இதில் கடந்த 2 நாட்களாக ரூ.70 கோடி வரை வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்ப டுகிறது.

இதைத்தொடர்ந்து இன்று 3வது நாளாக திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களிலுள்ள கூலிக்கு நெசவு செய்யும்விசைத்தறியாளர்கள்வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்க ளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள் ளது. மேலும் உற்பத்தி செய்யப்பட்ட காடா துணிகளும் தேக்கம் அடையும் அபாயம் உருவாகியுள்ளது.இது தற் போது மக்களிடையே பேசுபொரு ளாக மாறியுள்ளது.

## கோவை அருகே ரூ. 71.50 லட்சம் ஹவாலா பணமா? அடுத்த கட்ட நடவடிக்கையில் போலீசார்



கோவையிலிருந்து கேரளா செல்லும் பேருந் தில் ஆவணமின்றி பணம் கடத்தப்படுவதாக காவலர்களுக்கு ரகசிய தகவல் ஒன்று கிடைத்தது.

அவ்வகையில், கோவை பாலக்காடு தேசிய நெடுஞ்சாலையில் பேருந்துகளில் சோதனை மேற்கொண்டனர்.அப்போது,பேருந்தில் பய ணித்த ஒருவரிடம் ரூ. 71.50 லட்சம் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த ஹவாலா பணத்தை கேரள காவலர்கள் வருமான வரித்துறையினரிடம் ஒப்படைத்த னர்.

இந்த பணத்தை அனுப்பி வைத்தவர் யார், யாருக்காக கொண்டு செல்லப்படுகிறது என்பது பற்றி, காவல்துறையினர் மற்றும் வருமான வரித் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். விரைவில் இந்தச்சம்பவத்திற்குப் பின்னல் இருப் பவர்களை பிடிப்போம் என உறுதியளித் துள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ள கிறிஸ்துவ சர்ச் நர்சரி அண்ட் பிரைமரி ஸ்கூல் 46 ஆவது ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா நடைபெற்றது,



காரைக்குடி 100 அடி சாலையில் சேர்வாஊரணியை பிரபல ரவுடி மனோஜ் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் கண்டிஷன் பெயில் கையெழுத்து ஓட செல்லும் பொழுது காரில் வந்த மர்மகும்பல் மனோஜை ஓட ஓட விரட்டி படுகொலை செய்தனர் மனோஜின் நண்பர்கள் இருவரை காயத்துடன் மருத்துவமனையில் காவல்துறையினர் அனுமதித்து விசாரணை செய்து வருகின்றனர்

தினகனி



# தவெக பொதுக்குழு நிர்வாகிகள் ஆய்வு



சென்னை, மார்ச்.22
தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் அரசியல் கட்சியை அண்மையில் தொடங்கினார். இதையடுத்து தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் அரசியல் மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ந்தேதி பிரமாண்டமாக நடந்தது. இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. மாநாட்டை தொடர்ந்து 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார். மேலும் தமிழகம் முழுவதும் கட்சிக்கு மாவட்ட செயலாளர்கள், புதிய நிர்வாகிகளை விஜய் நியமித்து வருகிறார்.

இந்த நிலையில், வருகிற 28ம் தேதி தமிழக வெற்றிக் கழக பொதுக்குழு நடைபெறவுள்ள திருவான்மியூர் ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் முன்னேற்பாடுகள் அக்கட்சி நிர்வாகிகள் ஆய்வு செய்தனர்.

பொதுச்செயலாளர் ஆனந்த், தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்து நடைபெற்றுவரும் ஏற்பாடுகள், பணிகள் குறித்து நிர்வாகிகளிடம் கேட்டறிந்து விரைந்து முடிக்க அறிவுறுத்தினர்.

# சென்னையில் 3 நாள் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி: அரசு தகவல்




சென்னை, மார்ச்.22
தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சியை வரும் 26ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடத்தவுள்ளது. இப்பயிற்சியில் பேக்கரி பொருட்களின் மூலப்பொருள், பிராண்ட் போன்றவற்றின் கிடைக்கும் தன்மை, கருவிகள் மற்றும் உபகரணங்களின் உள்ளீடுகள், இயந்திரங்கள் முதலியன, ஹைதராபாத் கராச்சி பிஸ்கட், ஜெர்ரா உப்பு பிஸ்கட், இனிப்பு குக்கீகள், ஈஸ்ட் புளிக்கவைக்கப்பட்ட பாம்பே பன், இனிப்பு ரொட்டி, கிரீம் பன், பழ ரஸ்க், பப்ஸ் வகைகள் கேக் வகைகள் எப்படி தயாரிப்பது பற்றி இப்பயிற்சியில் விளக்குவார்கள்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிபற்றியகூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் *www.editn.in* <*http://www.editn.in*> என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032. 8668108141 / 8668102600 என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம் என அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# முதல்வர் படத்தை அவமதித்த வழக்கில் பாஜ பெண் நிர்வாகிகள் உள்பட 4 பேர் கைது: நீதிமன்றத்தில் கதறி அழுததால் பரபரப்பு

சென்னை, மர்ச்.22
சென்னை மேடவாக்கம் கூட்டுரோடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில்தமிழ்நாடுமுதல்வரின் படத்தை மாட்டியும், ஒட்டியும் போராட்டத்தில் ஈடுபட்ட பாஜவை சேர்ந்த பெண்கள் உள்பட 8 பேர் மீது 2 பிரிவின் கீழ் மேடவாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இதில் கோவிலம்பாக்கத்தைச் சேர்ந்த விஜயகுமார் (50), நன்மங்கலம் பகுதியைச் சேர்ந்த அன்னபூரணி (36), பெரும்பாக்கம் பகுதியைச் சேர்ந்த மும்தாஜ் மற்றும் மேடவாக்கம் பகுதியைச் சேர்ந்த ராணி ஆகிய 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

மற்றவர்கள் தலைமறைவாகிவிட்டனர். கைது செய்யப்பட்ட நிர்வாகிகள் ஆலந்தூர் நீதிமன்றம் வந்தடைந்ததும் போலீஸ் வேனில் இருந்து கீழே இறங்கிய 3 பெண்களும் எங்கே தங்களை சிறையில் அடைத்து விடுவார்களோ என பயந்து கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.

நீதிமன்ற நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த பாஜ மாநில துணை பொது செயலாளர் கரு.நாகராஜன், மாவட்ட தலைவர் குமார்,

வழக்கறிஞர் ராஜராஜன் ஆகியோரை பார்த்து, ''போராட்டம் நடத்த சொன்ன நீங்கள் வெளியில் இருக்கிறீர்கள்.

போராடிய நாங்கள் சிறைக்கு செல்ல வேண்டுமா?'' என்று கேட்டனர். அவர்களை சமாதானப்படுத்தி நீதிமன்றத்துக்குள் நிர்வாகிகள் அனுப்பி வைத்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி 3 பெண்கள் உள்பட 4 பேரையும் ஜாமீனில் விடுதலை செய்தார்.

# அடமான நகைகளுக்கு வட்டியில்லை எனக்கூறி மோசடி 3 வங்கிகளின் மேலாளர்கள் ஆஜராக சம்மன்: சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மார்ச்.22
அடமான நகைகளுக்கு வட்டியில்லை என்று கூறி மோசடி செய்த வழக்கில் வங்கி கணக்குகள் முடக்கம், நகைகள் மீட்பு தொடர்பாக விளக்கமளிக்க சம்பந்தப்பட்ட 3 வங்கி மேலாளர்கள் ஆஜராகுமாறு சம்மன் அனுப்ப சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னை முகப்பேரில் செயல்பட்டு வந்த ஏ.ஆர்.டி. ஜூவல்லர்ஸ் கோல்டு லோன் என்ற நிறுவனம் நகைக் கடன் வழங்குவதாகவும், அடமானம் வைக்கும் நகைகளுக்கு முதல் 12 மாதம் வட்டி இல்லை என்றும் விளம்பரம் செய்திருந்தது. இதை நம்பி பலர் தங்கள் நகைகளை வைத்து பணம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் தாங்கள் அடமானம் வைத்த தங்க நகைகளை மோசடி செய்ததாக அடமானம் வைத்தவர்கள்அளித்தபுகார்களின் அடிப்படையில், கடந்த 2023ம் ஆண்டு மார்ச் 30ம் தேதி சென்னை பொருளாதார குற்றப் பிரிவு போலீசார் அந்த நிறுவனத்தின் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், இந்த ஏ.ஆர்.டி. ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் மோசடியில் சிக்கி நகையை பறிகொடுத்த முகப்பேரைச் சேர்ந்த ஜூடி இன்ஃபண்ட் என்பவர் சென்னையில் உள்ளநிதிநிறுவனமோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த நிதி நிறுவன மோசடி வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்ற நீதிபதி முருகானந்தம், இந்த மனுவுக்கு போலீசார் பதில் தருமாறு உத்தரவிட்டார். இதையடுத்து, இந்த வழக்கில் அசோக் நகர் பொருளாதாரகுற்றப்பிரிவு டிஎஸ்பி அலெக்ஸாண்டர் தாக்கல் செய்த பதில் மனுவில்,குற்றம்சாட்டப்பட்ட நிறுவனத்தில் மனுதாரர் உள்ளிட்ட ஏராளமானோர் அடமானம் வைத்த நகைகளை முகப்பேர் ஐசிஐசிஐ வங்கி கிளை, அண்ணாநகர் சவுத் இண்டியன் வங்கி கிளை, அண்ணாநகர் கேத்தலிக் சிரியன் வங்கி கிளை ஆகிய 3 வங்கிகளில் மறு அடமானம் வைத்து மோசடி செய்துள்ளனர்.

அந்த வங்கிகளில் உள்ள நிறுவனத்தில் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. நீதிமன்றம் உத்தரவிட்டால் வங்கி கணக்குகள் மீண்டும் திறக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் பூ.வேலுமணியன், இ.பிரவீண் ஆகியோர் ஆஜராகினர். அப்போது, விசாரணை அதிகாரி அலெக்ஸாண்டர் நேரில் ஆஜரானார். வழக்கை விசாரித்த நீதிபதி, சம்பந்தப்பட்ட 3 வங்கிகளின் மேலாளர்கள் நேரில் ஆஜராகி, நகை கடன் தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு, விசாரணையை வரும் 28ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் நாளை ஜாக்டோ ஜியோ சார்பில் உண்ணாநிலை அறப்போராட்டம்: நிர்வாகிகள் அறிவிப்பு

சென்னை, மார்ச்.22
சேப்பாக்கம், எழிலக வளாகத்தில் வரும் 23ம் தேதி ஜாக்டோ ஜியோ சார்பில் உண்ணாநிலை அறப்போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வெளியிட்ட அறிக்கை: பழைய ஓய்வூதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும், காலவரையின்றி முடக்கப்பட்டுள்ள சரண்டரை வழங்க வேண்டும், 4 லட்சத்திற்கும் மேல் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.




021 தேர்தலின் போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. நமது கோரிக்கைகளை, உரிமைகளை மீட்டெடுக்க தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோவோடு நாம், தமிழ்நாடு தலைமை செயலக சங்கம் களத்தில் 2017 முதல் நிற்கிறோம். ஜாக்டோ ஜியோ என்கிற கூட்டமைப்பின் ஒன்றுபட்ட சக்தியினால் தான் 2017ல் ஏழாவது ஊதிய மாற்றத்தினை பெற்றோம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

ஜனநாயகம் நமக்கு அளித்துள்ள போராட்ட உரிமைகளை ஆயுதமாகக் கொண்டு நமது கோரிக்கைகளை வென்றெடுக்க தமிழகத்திலுள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் ஜாக்டோ ஜியோவோடு அணி திரள்வோம், உரிமைகளை மீட்டெடுப்போம். வரும் 23ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) சென்னை, சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் நடைபெறும் ஜாக்டோ ஜியோ உண்ணாநிலை போராட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்வோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தாராபுரம் நகர கழகம் சார்பாக ஜின்னா மைதானத்தில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி




தாராபுரம் நகர கழகம் சார்பாக ஜின்னா மைதானத்தில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி கழக காவல் தெய்வங்களின் நல்வழியில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் நல்வாழ்த்துக்கள்உடன். தமிழ்நாடு எதிர்க்கட்சி கொறடா, முன்னாள் உள்ளாட்சித்துறைஅமைச்சர், கழகதலைமைநிலைய செயலாளர் மாண்புமிகு அண்ணன் திரு S.P. வேலுமணி அவர்கள் நல்வாழ்த்துக்கள்உடன், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டச் கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு C.மகேந்திரன் M.A,MLA அவர்களின் நல்வாழ்த்துக்கள்உடன், தாராபுரம் நகர கழக செயலாளர் அண்ணன் திரு CR (எ) C.ராஜேந்திரன் B.E., அவர்கள் மற்றும் சிறப்பு வருகை : தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் திரு GRB (எ) GR. பாலகுமாரன் அவர்கள் தாராபுரம் நகரசிறுபான்மையர்பிரிவு மற்றும் தாராபுரம் நகரக் கழகம் வார்டு எண் 5, 6 சார்பாக ஜின்னா மைதானத்தில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது..

அனைத்து நகர மகளிர் அணி செயலாளர் திருமதி கௌரிசித்ரா முருகேசன் அவர்கள் , மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் திரு அரசகுமாரன் அவர்கள், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் திரு பங்கு மகேஷ் குமார் அவர்கள், மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் திரு இ பி பழனி குமார் அவர்கள், நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் திரு திலீப் சீனிவாசன் அவர்கள், மாவட்ட மாணவர் அணி துணைச் செயலாளர் திரு ஜாகிர் அப்பாஸ் அவர்கள், நகர சிறுபான்மையர் பிரிவு செயலாளர் திரு சபிஉல்லா அவர்கள் , நகர சிறுபான்மையர் பிரிவு தலைவர் திரு பழக்கடை ஷரீஃப் அவர்கள் , ஆறாவது வார்டு செயலாளர் திரு துல் பகார் அலி அவர்கள், நகரகழக நிர்வாகிகள் மற்றும் செயலாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள்,நகரக் கழக ஒன்றிய கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி மாவட்ட,நகர, ஒன்றிய செயலாளர்கள் நிர்வாகிகள், வார்டு கழக , கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் , வீராங்கனைகள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவரும் அணி திரளாக கலந்து கொண்டனர்.

# எஸ்டிபிஐ நிர்வாகிகளின் வீடு, கடையில் ஈ.டி ரெய்டு: இரும்புக்கடை அதிபர் கைது



மேட்டுப்பாளையம், மார்ச்.22
கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அன்னாஜி ராவ் ரோடு நியூ எக்ஸ்டென்ஷன் 1வது வீதியை சேர்ந்தவர் ராஜீக் (35). எஸ்டிபிஐ கட்சியின் கோவை வடக்கு மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளராக இருந்து வருகிறார். சிறுமுகை சாலையில் பழைய இரும்புக்கடை வைத்து உதிரி பாகங்கள் விற்பனை செய்து வருகிறார்.

இந்நிலையில், சட்டவிரோத பணப்பரிவர்த்தனை புகாரின் பேரில் நேற்று காலை 10 மணிக்கு பெண் அதிகாரி தலைமையில் 5 பேர் கொண்ட அமலாக்கத்துறையினர் ராஜீக் வீட்டில் அதிரடியாக சோதனை நடத்தினர். இது குறித்து தகவல் அறிந்த எஸ்டிபிஐ நிர்வாகிகள் உட்பட சுமார் 100க்கும் மேற்பட்டோர் திரண்டு ஒன்றிய மோடி அரசை கண்டித்தும், எஸ்டிபிஐ கட்சியினரை குறி வைத்து அமலாக்கத்துறையினரை வைத்து மிரட்டுவதாக கூறியும் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்னாஜி ராவ் ரோடு நியூ எக்ஸ்டென்ஷன் 2வது வீதியை சேர்ந்த எஸ்டிபிஐ கட்சி உறுப்பினரும், இரும்புக்கடை அதிபருமான வாஹித்தூர் ரகுமான் (35) என்பவரது வீட்டிலும், மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் உள்ள ரீலா (35) என்பவருக்கு சொந்தமான பழக்கடையிலும் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தினர். சோதனைக்கு பின் வாஹித்தூர் ரகுமானை அமலாக்கத்துறையினர் கைது செய்தனர். மொத்தம் 3 இடங்களில் சுமார் 10 மணி நேரம் சோதனை நடந்தது. சோதனையின் முடிவில் பல முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக கூறப்படுகிறது.

# தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில் எதுவும் செய்யாமல் தூங்கும் ஒன்றிய அரசு: ராமதாஸ் குற்றச்சாட்டு



திண்டிவனம், மார்ச்.22
திண்டிவனம் அருகே தைலாபுரம் இல்லத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: வேளாண் விளை நிலங்கள் வேறு பயன்பாட்டிற்கு மாற்றப்படுவதை தடுக்க சட்டம் இயற்ற வேண்டும். தமிழக அரசு நில ஒருங்கிணைப்பு சட்டத்தை திரும்ப பெற வேண்டும்.

சட்டப்பேரவை கூட்ட தொடரை நூறு நாட்கள் நடத்த வேண்டும். தமிழ்நாட்டில் கொடூர கொலைகளை தடுக்கும் வகையில் சட்டம் ஒழுங்கினை பாதுகாக்க வேண்டும். தமிழில் கடைகளின் பெயர் பலகைகள் வைப்பது கட்டாயம் என சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது வரவேற்கதக்கது. மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்காமல் ஒன்றிய அரசு எதுவும் செய்யாமல் உள்ளது.

இதில் வெளியுறவுத்துறை உறங்கிக் கொண்டிருக்கிறது. மதுரை உயர்நீதிமன்றம் பொது இடங்களில் வைத்த கொடி கம்பங்களை அகற்ற வேண்டுமென உத்தரவிட்டதன் பேரில் அதனை அகற்ற திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் உத்தரவிட்டுள்ளார். வெளிநாடுகள், பல்வேறு மாநிலங்களில் சாலைகளின் ஓரங்கள், பாலத்தின் மீது கட்சி விளம்பரங்கள் இல்லை. எனவே தமிழ்நாட்டிலும் இது தேவையில்லை. சாலைகளும் பாலங்களும் மிளிர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நெல்லை மாஜி எஸ்ஐ கொலை வழக்கு உதவி கமிஷனர் சஸ்பெண்ட்



கோவை, மார்ச்.22
நெல்லைஎஸ்ஐகொலை வழக்கில் கோவை சிறப்பு நுண்ணறிவு பிரிவு உதவி கமிஷனர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். நெல்லையில் கடந்த 18ம் தேதி ஓய்வு பெற்ற எஸ்ஐ ஜாகிர் உசேன் பிஜிலி (60), கொலை செய்யப்பட்டார். வக்ப் நிலப்பிரச்சினை தொடர்பாக நடந்த இந்த கொலையில் போலீசாரால் தேடப்பட்டு வந்த இருவர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். முக்கிய நபரான தௌபீக் (என்ற) கிருஷ்ணமூர்த்தியை துப்பாக்கிச் சூடு நடத்தி போலீசார்கைதுசெய்தனர்.

இதனிடையே, சம்பவத்தில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளையும் உடனடியாக கைது செய்ய வேண்டும். அலட்சியமாக செயல்பட்ட டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன், உதவி கமிஷனர் செந்தில்குமார் ஆகியோரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அவரது உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து நெல்லை டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். நெல்லை டவுன் சரக முன்னாள் போலீஸ் உதவி கமிஷனரும், தற்போது கோவை மாநகர சிறப்பு நுண்ணறிவு பிரிவு உதவி கமிஷனருமான செந்தில்குமார் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டு இருந்தது. இதைத்தொடர்ந்து டிஜிபி சங்கர் ஜிவால் நேற்று கோவை மாநகர சிறப்பு நுண்ணறிவு பிரிவு உதவி கமிஷனர் செந்தில்குமாரை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளார்.

# காஷ்மீரில் வீரமரணம் தமிழக ராணுவ வீரரின் உடல் 21 குண்டுகள் முழங்க தகனம்

செய்யாறு, மார்ச்.22
திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அடுத்த வெம்பாக்கம் குளத்து தெருவை சேர்ந்தவர் ஜீவகன், ஓய்வு பெற்ற போலீஸ்காரர். இவரது மகன் வினோத்குமார்(49). காஷ்மீர் பகுதியில் 62வது படைத்தளத்தில் ராணுவ வீரராக பணிபுரிந்து வந்தார். இவருக்கு நர்மதா(45) என்ற மனைவியும், ரஷிதா(18), கீர்த்தனா(15) என்ற 2 மகள்களும் உள்ளனர். கடந்த 18ம்தேதி மாலை 3.49 மணியளவில் காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட சண்டையில் வினோத்குமாரின் வலது தோள்பட்டையில் குண்டு பாய்ந்தது.

அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் வீரமரணம் அடைந்தார். இவரது உடல் நேற்று அதிகாலை சொந்த ஊரான வெம்பாக்கத்திற்கு ராணுவ வாகனத்தில் கொண்டு வரப்பட்டது.



அவரது உடலுக்கு செய்யாறு சப்கலெக்டர் பல்லவிவர்மா, ஏடிஎஸ்பி சிவனுபாண்டி, 62வது ராணுவ பிரிவு தலைமை அலுவலர் ஈஸ்வரசிங் மற்றும் ஏராளமான கிராம மக்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து 11 மணியளவில் ராணுவ வீரர் வினோத்குமாரின் உடலுக்கு 21 குண்டுகள் முழங்க ராணுவ இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அவரது உடல் மீது போர்த்தப்பட்டிருந்த தேசிய கொடி, குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதைத்தொடந்து வெம்பாக்கம் தாலுகா அலுவலகம் பின்புறம் உள்ள சுடுகாட்டில் உடல் தகனம் செய்யப்பட்டது.

# வேலூர்: பைக் மீது லாரி மோதி விபத்து; கல்லூரி மாணவர் பலி

வேலூர், மார்ச்.22

வேலூர் காட்பாடியை சேர்ந்தவர் நகீம். இவர் அப்பகுதியில் உள்ள ஒரு கல்லூரியில் படித்து வந்தார். இந்த நிலையில் அவர் தனது பைக்கில் சென்றுகொண்டிருந்த போது. எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த லாரி ஒன்று பைக் மீது மோதியது.

இந்த கோர விபத்தில் நகீம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் இந்த விபத்தில் படுகாயமடைந்த மற்றொரு நபர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் இறந்தவரின் உடலை மீட்டு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைகாக அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வழக்கு ப்பதிவு செய்த சத்துவாச்சாரி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கற்றலை மேம்படுத்தும் காலை உணவுத் திட்டம்: முதல்வர் பெருமிதம்

சென்னை, மார்ச்.22

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சிந்தனையுடன் திட்டமிடுவது என்பது உடனடிபிரச்சினைகளைத் தீர்ப்பது மட்டுமல்ல. நாம் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் சமூகத்தை மாற்றுகிறது.

காலை உணவுத் திட்டம் குழந்தைகளிடையே கடுமையான நோய்களைக் கணிசமாகக் குறைத்துள்ளது, அதே நேரத்தில் கவனம், நினைவாற்றல் மற்றும் கற்றல் விளைவுகளை மேம்படுத்துகிறது. குழந்தைகள் பள்ளியில் சிறப்பாக செயல்படுகின்றனர் .இது நீண்டகால சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது. தமிழ்நாடு கல்வி மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

அதே தொலைநோக்கு அணுகுமுறையுடன், நமது திராவிட மாடல் அரசாங்கம் குறிப்பிடத்தக்க, தொலைநோக்கு நன்மைகளைத் தரும் நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.என தெரிவித்துள்ளார்.

# பள்ளி மாணவிகளை விபசாரத்தில் ஈடுபடுத்திய வழக்கு: 7 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த தம்பதி கைது

கடலூர், மார்ச்.22



கடலூர் மாவட்டம் திட்டக்குடி பகுதியில் உள்ள அரசு பள்ளியில் கடந்த 2014ம் ஆண்டு 7ம் வகுப்பு படித்து வந்த 13 வயது மாணவியும், 8ம் வகுப்பு படித்து வந்த 14 வயது மாணவியும் தோழிகளாக இருந்தனர். இதில் 13 வயது மாணவி பெற்றோரை இழந்தவர் என்பதால், தனது பாட்டியின் பராமரிப்பில்தங்கி படித்து வந்தார். இவர் அருகில் உள்ள இட்லிகடைக்கு பலகாரம் வாங்க சென்றபோது, அந்த கடை உரிமையாளரான செந்தில்குமார் மனைவி லட்சுமி என்ற தனலட்சுமி, அவரது கள்ளக்காதலனான திருக்கண்டேஸ்வரத்தைசேர்ந்தவர் என்ற ஆனந்தராஜூடன் உல்லாசமாக இருந்ததை பார்த்து விட்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த தனலட்சுமி தனது லீலை பற்றி வெளியே தெரியாமல் இருக்க அந்த மாணவியை தனது வீட்டுக்கு அழைத்துச்சென்று, கட்டாயப்படுத்தி ஆனந்தராஜூடன் உல்லாசமாக இருக்க வைத்தார். தொடர்ந்து ஆனந்தராஜ் அந்த மாணவியை மிரட்டி, தனது நண்பர்களான திட்டக்குடியை சேர்ந்த மோகன் என்ற மோகன்ராஜ், மதிவாணன் ஆகியோருக்கும் விருந்தாக்கினார்.

அதனை தொடர்ந்து தனலட்சுமி 13 வயது மாணவியை மிரட்டி, அவரது தோழியான 14 வயது மாணவியையும் ஆனந்தராஜின் காமபசிக்கு இரையாக்கினார். அதன்பிறகு அந்த மாணவிகளை தனலட்சுமி விருத்தாசலத்தில் உள்ள விபசார புரோக்கர் கலாவின் வீட்டுக்கு அழைத்துச்சென்று விருத்தாசலத்தை சேர்ந்த அன்பு என்ற செல்வராஜ் மூலம் கட்டாயப்படுத்தி விபசாரத்தில் ஈடுபடுத்தினார்.

தொடர்ந்து தனலட்சுமி திட்டக்குடியை சேர்ந்த மதபோதகர் அருள்தாஸ் என்பவர் வீட்டுக்கு 2 நாட்கள் மாணவிகளை அனுப்பி வைத்தார். அதில் அவர் 13 வயது மாணவியுடன் உல்லாசம் அனுபவித்து உள்ளார். இதே போல் கலாவும், தனலட்சுமியும் சக புரோக்கர்களும் 2 மாணவிகளையும் விழுப்புரம் மாவட்டம் வளவனூர், சேலம், வடலூர், நெய்வேலி ஆகிய இடங்களுக்கு அழைத்துச்சென்று விபசாரத்தில் ஈடுபடுத்தி உள்ளனர்.

கடைசியாக அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தை சேர்ந்த சேகர் மகன் சதீஷ்குமார் (39), அவரது மனைவி தமிழரசி ஆகியோருக்கு மாணவிகள் விற்கப்பட்டுள்ளனர். அவர்கள் இரு மாணவிகளையும் வடலூரில் உள்ள வாடகை வீட்டில் தங்க வைத்து விபசாரத்தில் ஈடுபடுத்தி உள்ளனர். அப்போது மாணவிகள் இருவரும் சதீஷ்குமாரின் வாடகை வீட்டில் இருந்து தப்பி திட்டக்குடிக்கு சென்று போலீசில் தகவல் தெரிவித்தனர்.

இதுதொடர்பான புகாரின் பேரில் சதீஷ்குமார், தமிழரசி, திட்டக்குடியை சேர்ந்த மதபோதகர் அருள்தாஸ் உள்பட 19 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இவ்வழக்கில் சதீஷ்குமார், அவரது மனைவி தமிழரசி ஆகியோர் தலைமறைவாக இருந்தனர். மற்ற 17 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்கிடையே இந்த வழக்கின் விசாரணையில் தொய்வு ஏற்பட்டதால், சென்னை ஐகோர்ட்டு உத்தரவுபடி இவ்வழக்கு கடந்த 2016ம் ஆண்டு சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணைக்கு மாற்றப்பட்டது.

இதையடுத்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தி 19 பேர் மீதும் கடலூர் மகளிர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். இவ்வழக்கில் அனைத்து விசாரணைகளும் முடிவடைந்த நிலையில் 17 பேரில் 16 பேர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் அவர்களுக்கு சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். குற்றம்சாட்டப்பட்ட ஒரு பெண் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். இதையடுத்து இவ்வழக்கில் கடந்த 2018ம் ஆண்டு முதல் தலைமறைவாக இருந்த சதீஷ்குமார், தமிழரசியை சி.பி.சி.ஐ.டி. போலீசார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் சதீஷ்குமார் கோவையில் இருப்பதாக போலீசாருக்குதகவல் கிடைத்தது. இதையடுத்து இன்ஸ்பெக்டர் பாலமுருகன் தலைமையிலான சி.பி.சி.ஐ.டி. போலீசார் கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி சென்று, அங்குள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்த சதீஷ்குமாரை மடக்கி பிடித்து கைது செய்தனர். மேலும் அவர் அளித்த தகவலின் அடிப்படையில் திருவண்ணாமலையில் வீட்டு வேலை செய்து வந்த தமிழரசியை போலீசார் கைது செய்து கடலூர் அழைத்து வந்தனர்.

# இன்ஸ்டாகிராமில் காதல் வலை வீசி இளைஞர்களை கஞ்சா வியாபாரியாக மாற்றிய இளம்பெண்

சென்னை, மார்ச்.22



சென்னை திரிசூலம் ரெயில்வே கேட் அருகே போலீசார் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்திற்குரிய வகையில் சென்று கொண்டிருந்த ஒரு இளம்பெண்ணிடம் விசாரணை நடத்தினர். அந்த பெண்ணிடம் இருந்த பையை சோதனை செய்தபோது, அதில்சுமார் 3 கிலோ கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து போலீசார் உடனடியாக அந்த இளம்பெண்ணை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அந்த பெண் திரிபுரா மாநிலம் உதய்பூரை சேர்ந்த பாயல் தாஸ் என்பதும், அவருக்கு திருமணமாகி ஒரு குழந்தை இருப்பதாகவும் தெரியவந்தது. கடந்த 3 ஆண்டுகளாக பாயல்தாஸ் சென்னையில் தங்கியிருந்து கஞ்சா கடத்தி வந்துள்ளார்.

அதோடு, இன்ஸ்டாகிராமில் இளைஞர்களுக்கு காதல் வலை வீசி, அவர்களில் சிலரை கஞ்சா வியாபாரிகளாக மாற்றியுள்ளார்எனதகவல் வெளியாகியுள்ளது. கைது செய்யப்பட்ட பாயல் தாஸை தாம்பரம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்த போலீசார், இந்த வழக்கு குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான கண்காணிப்பு குழு கூட்டம்: 29ம் தேதி நடக்கிறது

சென்னை, மார்ச்.22

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் 1989, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள் 2016 மற்றும் 2018, விதி16ன்படி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைவராகக் கொண்டு நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் எம்.மதிவேந்தன் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோருடன் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள மாநிலங்களவை / மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடன் வருகிற 29ம் தேதி (சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

வன்கொடுமைக்கு ஆளானவர்களுக்கு அளிக்கப்பட்ட தீருதவி, மறுவாழ்வு மற்றும் அவை பற்றிய விவரங்கள், இந்தச் சட்டத்தின்கீழ் வழக்குகள் தொடுத்தல், சட்டத்தைச் செயற்படுத்தும் பல்வேறு அலுவலர்களின் / அமைப்புகளின் பங்கு, பணி மற்றும் மாநில அரசால் பெறப்படும் பல்வேறு அறிக்கைகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்தச் சட்டம் 2015இல் அத்தியாயம் 4ஏ இல் உள்ள பிரிவுக் கூறு 15 ஏ(11)இன்படி வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் ஆகியவை குறித்து இந்த கண்காணிப்புக் குழு கூட்டத்தில் ஆய்வு செய்யப்படவுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை மாவட்டத்தில் குற்றச் செயல்கள் அதிகரிப்பா..? காவல்துறை விளக்கம்

திருநெல்வேலி, மார்ச்.22




திருநெல்வேலி மாவட்ட காவல் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தனியார் தொலைக் காட்சி ஒன்றில், திருநெல்வேலி புறநகரில் கடந்த 5 ஆண்டுகளில் 211 பேர் கொலை, திருநெல்வேலி மாவட்டம் மற்றும் மாநகரத்தில் 392 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது, சிறார்கள் 60 பேர் உட்பட கொலை வழக்குகளில் 1045 கைது, பெருமாள்புரம், பாளையங்கோட்டை, பேட்டை, மேலப்பாளையம், தச்சநல்லூர் பகுதியில் சாதி ரீதியான கொலைகள் அதிகம் பதிவாகி உள்ளது, கொலை நகரமாக மாறும் நெல்லை என்று செய்தி வெளியிட்டது.

ஆனால்,திருநெல்வேலி மாவட்டம் மற்றும் மாநகரத்தில் கடந்த 5 ஆண்டுகளில் காவல்துறையின் கடுமையான நடவடிக்கைகளால் கொலை சம்பவங்கள் குறைந்துள்ளன.

திருநெல்வேலி மாநகர மற்றும் மாவட்ட காவல்துறையின் துரித நடவடிக்கையால் கொலை குற்றவாளிகளின் செயல்பாடுகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டும், சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் ஏதுமின்றி அமைதியாக இருக்க காவல்துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இதுபோன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் நெல்லை மாவட்டத்தில் குற்ற சம்பவங்கள் வெகுவாக குறைந்து வருகிறது. மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்ளும் நபர்கள் காவல்துறையின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர்.

திருநெல்வேலி மாவட்ட காவல் எல்லையில் கடந்த 2020ம் ஆண்டு 40 கொலைகளும், 2021ம் ஆண்டு 52 கொலைகளும், 2022ம் ஆண்டு 44 கொலைகளும், 2023ம் ஆண்டு 44 கொலைகளும், 2024ம் ஆண்டு 35 கொலைகளும், 2025ம் ஆண்டு 7 கொலைகளும் நடந்துள்ளது. நெல்லை மாநகர எல்லையில் கடந்த 2020ம்ஆண்டு14கொலைகளும், 2021ம் ஆண்டு 9 கொலைகளும், 2022ம் ஆண்டு 18 கொலைகளும், 2023ம் ஆண்டு 17 கொலைகளும், 2024ம் ஆண்டு 17 கொலைகளும், 2025ம் ஆண்டு 4 கொலைகளும் நடந்துள்ளன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் காவல்துறையின் துரித நடவடிக்கையால் கொலை குற்றங்கள் குறைந்துள்ளன. மேலும் 11 நபர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தும். கொடுங் குற்றங்களில் ஈடுபட்ட நபர்களில் 1306 நபர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகரம் மற்றும் மாவட்டத்தில் தற்போது கொலை போன்ற முக்கிய குற்றங்களை குறைக்கும் நோக்கத்தோடு, முக்கிய வழக்குகளில் தனிக் கவனம் செலுத்தி வழக்கு விசாரணையினை விரைவுபடுத்தி தண்டனை பெற வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காவல்துறையின் துரித நடவடிக்கையால் 2025ம் ஆண்டில் மட்டும் இதுவரை 11 கொலை வழக்குகளில் ஈடுபட்ட நபர்களில் ஒருவருக்கு மரண தண்டனையும் 37 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதில் 10 நபர்கள் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் ஆகும். மேலும் ஒவ்வொரு சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கும் ஒரு காவலர் என்ற ரீதியில் நியமித்து அவர்களது நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதுடன் ஆகஸ்ட் 2023 முதல் இதுவரையில் 1890 சரித்திர பதிவேடு குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டும், 2327 குற்றவாளிகள் எச்சரிக்கப்பட்டும், 846 குற்றவாளிகளிடமிருந்து நன்னடத்தை பிணையம் பெற்றும், 606 குற்றவாளிகள் மீது நன்னடத்தை பிணையம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு தூக்கு தண்டனையும் 100 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் பெறப்பட்டுள்ளன. மேலும் 4 நபர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தும் கொடுங்குற்றங்களில் ஈடுபட்ட நபர்களில் 943 நபர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் குற்றத் தடுப்பு நடவடிக்கையாக 17304 நடைரோந்துகள் செய்தும், சாதி அடையாளங்கள் 2129 இடங்களில் அழிக்கப்பட்டும், 7077 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதோடு, இளஞ்சிறார்கள் தவறான வழியில் செல்லாமல் இருப்பதை தவிர்ப்பதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் 654 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டும், பொது மக்களுக்கு சாதி ரீதியான குற்றங்கள் மற்றும் அதன்விளைவுகள் குறித்து 269 கிராம விழிப்புணர்வு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சமூக வலைதளங்களில் பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் பதிவேற்றிய நபர்கள் மீது இதுவரை 98 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 105 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். திருநெல்வேலி ஊரக காவல் எல்லையில் கடந்த 2024 மற்றும் 2025ம் ஆண்டுகளில் ஜாதிய கொலை எதுவும் நடைபெறவில்லை. மேலும் மாநகர காவல் எல்லையில் பேட்டை, தச்சநல்லூர்பகுதிகளில் ஜாதிய கொலை எதுவும் நடைபெறவில்லை.

சில ஊடகங்களில் புள்ளிவிபரங்களை தவறாக சித்தரித்து மிகைப்படுத்தி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பாஜகவின் அடியாளாக அமலாக்கத்துறை செயல்படுகிறது: அமைச்சர் ரகுபதி விமர்சனம்

சென்னை, மார்ச்.22



சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

அமலாக்கத் துறையின் மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் தமிழ்நாடு அஞ்சாது, என்பதை அறியாத ஆதிக்கவாதிகளின் அராஜக நடவடிக்கைக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் அமலாக்கத்துறைக்குக் குட்டு வைத்திருக்கிறது ஐகோர்ட்டு. அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்கிலேயே சுப்ரீம் கோர்ட்டால் கடும் கண்டனத்தை எதிர்கொண்ட அமலாக்கத்துறை தற்போது மீண்டும் சென்னை ஐகோர்ட்டின் கண்டனத்திற்கு ஆளாகியிருக்கிறது.

தமிழ்நாட்டின் போர்க்குணத்தை அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் எதிர்கொள்ளத் திராணி இல்லாத பாஜக, தனது அச்சுறுத்தல் ஆயுதத்தை அமலாக்கத் துறை மூலம் நீட்டியது. எதிர்க் கட்சிகளை மிரட்டுவதற்காக அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ, தேர்தல் ஆணையம் போன்ற அதிகார அமைப்புகளைத் தனது கைப்பாவையாக மத்திய பாஜக அரசு பயன்படுத்தி வருகிறது. பாஜக ஆளாத மாநிலங்களில் முகாந்திரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைத்து, அமலாக்கத் துறை பல்வேறு வழக்குகளைப் புனைந்து, எதிர்க்கட்சிகளை முடக்குவதையேதனது முழுநேரப் பணியாகக் கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர்களையும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த முதலமைச்சர்களையும் கைது செய்து, ஜனநாயகத்திற்கு எதிரான சர்வாதிகார அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் பாஜகவின் அடியாளாகச் செயல்படுகிறது அமலாக்கத் துறை. மோடி அரசின் 10 ஆண்டு ஆட்சியில் அரசியல் தலைவர்கள் மீது பதிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை 193 ஆனால், இதுவரை 2 வழக்குகளில் மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது தண்டனை விகிதம் வெறும் 1.03 சதவிகிதம்தான். இதனை நாடாளுமன்றத்திலேயே பாஜக ஒத்துக்கொண்டிருக்கிறது. சோதனைகள், கைதுகள் மூலம் தனது அரசியல் எதிரிகளை மிரட்டிப் பழிவாங்கவும் அவர்களது செயல்பாடுகளை முடக்கவும் அமலாக்கத் துறை அரசியல் சதியை நடத்தி கொண்டிருப்பதை தான் தண்டனை விகிதம் வெளிக்காட்டுகிறது.

அமலாக்கத் துறையால் வழக்குகள் பதியப்பட்டவர்கள், பாஜகவில் இணைந்ததும், அவர்கள் மீதான நடவடிக்கைகள் நின்றுவிடுவது அமலாக்கத்துறையின் அறிவிக்கப்படாத விதியாகும். அமலாக்கத்துறை சோதனை நடத்துவதும் வழக்கு பதிவதும் முழுக்க முழுக்க பாஜகவுக்கு ஆள்பிடிக்க மட்டுமே. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களைக் குறிவைத்து சோதனை நடத்துவது அதை வைத்து வழக்கு போடுவேன் எனச் சொல்லி மிரட்டி அவர்களை பாஜகவிற்கு ஆதரவாளராக மாற்றுவது என மத்திய பாஜக அரசின் அடியாள் துறையாக அமலாக்கத்துறை செயல்பட்டு வருகிறது. பாஜகவின் இந்த பேர அரசியலுக்கு அடிபணியாதவர்களை மட்டும் சிறையில் வைத்து மிரட்டிப் பார்ப்பது என்ற மிக மிகக் கேடுகெட்ட கேவலமான வேலையை மத்திய பாஜக அரசு செய்து வருகிறது.

அமலாக்கத் துறையை வைத்து பூச்சாண்டி காட்டியதால் பாஜகவோடு இணைந்தவர்களைப் பட்டியல் போட்டால், சுவேந்து அதிகாரி, முகுல் ராய், ஷிண்டே, அஜீத் பவார், பிரேம் காந்த் என அவர்கள் நம்பும் அனுமார் வால் போல அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். வடக்கே அமலாக்கத்துறையை வைத்து பாஜகவிற்கு ஆள் பிடித்த பார்முலாவை இங்கே செய்து பார்க்கலாம் எனக் கணக்கு போடுகிறது பாஜக. ஆனால் முதுகெலும்பில்லாத கோழைகள் வேண்டுமானால் பாஜகவின் சித்து விளையாட்டிற்குப்பயந்து பாஜகவை ஆதரித்து அடிபணியலாம் ஆனால், ஒரு காலமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடித் தொண்டனையோ, திராவிட மாடல் அரசையோ துரும்பளவு கூட அசைத்துப் பார்க்க முடியாது.

பல மாநிலங்களில் மேற்கொண்ட அமலாக்கத்துறையின் மிரட்டல் உத்தியைத் தமிழ்நாட்டையும் திமுகவையும் மிரட்டிப்பார்க்கலாம் என நினைத்து, தமிழ்நாட்டின் டாஸ்மாக் நிறுவனத்தில் முகாந்திரமற்ற வகையில் சோதனை மேற்கொண்டது. தொகுதி மறுசீரமைப்பிற்கு எதிராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இப்போது எடுத்திருக்கும் முயற்சி நாடாளுமன்ற மட்டுமல்லாது, நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலிருந்து கிடைத்திருக்கும் ஆதரவு பாஜகவை நிலைகுலையச் செய்திருக்கிறது. தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஒழித்துக்கட்டத் தொகுதி சீரமைப்பின் பெயரால் பாஜக போட்டிருந்த பாசிசத் திட்டத்தை முளையிலேயே முதல்அமைச்சர் அம்பலப்படுத்திவிட்டார் என்ற ஆத்திரத்திரத்தில் ஆற்றாமையிலும் அமலாக்கத்துறையை மத்திய அரசு ஏவிவிட்டுள்ளது.

வரும் 22ம் தேதி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் தலைமையில் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிராகப் பல்வேறு மாநில முதல்மந்திரிகளும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ள இருக்கிற ஆலோசனைக் கூட்டம் பாஜகவின் தூக்கத்தைக் கெடுத்திருக்கிறது. அதனால்தான் அமலாக்கத் துறையை வைத்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அமலாக்கத்துறையைப் புனிதமான விசாரணை அமைப்பாகக் காட்டி வந்த பாஜகவின் பிம்பம் தமிழ்நாட்டில்தான் முதல்முறையாகத்துடைத் தெறியப்பட்டது. கொள்ளையனோடு கூட்டு சேர்ந்த காவலனாக அமலாக்கத்துறை பாஜகவோடு கூட்டு வைத்து, பாஜகவின் குற்றங்களுக்குத் துணை போய்க் கொண்டிருப்பது நாட்டிற்கு நல்லதல்ல. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

22.3.2025

# சென்னையில் ரவுடி துப்பாக்கியால் சுட்டு பிடிப்பு; போலீசார் அதிரடி

சென்னை, மார்ச்.22

தூத்துக்குடியை சேர்ந்த பிரபல ரவுடி ஐகோர்ட்டு மகாராஜா. இவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதனிடையே, சென்னை ஆதம்பாக்கத்தில் கடந்த சில நாட்களுக்குமுன் போலீசார் நடத்திய சோதனையில் தூத்துக்குடியை சேர்ந்த சில ரவுகள் கைது செய்யப்பட்டனர். அந்த ரவுடிகளிடம் நடத்தப்பட்ட விசாரணையில் பிரபல ரவுடி ஐகோர்ட்டு மகாராஜாவும் சென்னையில் பதுங்கி இருப்பது தெரியவந்தது.



இந்நிலையில், சென்னை கிண்டியில் பதுங்கி இருந்த ரவுடி ஐகோர்ட்டு மகாராஜாவை இன்று போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்துள்ளனர்.

ஆதம்பாக்கத்தில் உள்ள நகைக்கடை உரிமையாளரை கொலை செய்யும் நோக்கத்தோடும் தூத்துக்குடி ரவுடி கும்பல் சென்னைக்கு வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட ரவுடி ஐகோர்ட்டு மகாராஜா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பயணியிடம் இருந்து அரிய வகை உயிரினங்கள் பறிமுதல்: மதுரை விமான நிலையத்தில் பரபரப்பு

மதுரை, மார்ச்.22

மதுரை விமான நிலையத்தில் இந்திய வனத்துறையால் தடை செய்யப்பட்ட அரிய வகை 64 வன உயிரினங்களை சுங்க இலாகா நுண்ணறிவு பிரிவினர் கைப்பற்றி உள்ளனர். இலங்கையில்இருந்து மதுரை வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் வேலூரை சேர்ந்த பயணி ஒருவரின் உடமைகளை பரிசோதனை செய்தனர்.




அப்போது ஒரு சூட்கேசில் இந்திய வனத்துறையால் தடை செய்யப்பட்ட அரிய வகை ஆமைகள் 52,, பல்லிகள் 4, குட்டி பாம்புகள் 8, என மொத்தம் 64 வன உயினங்கள் கொண்டு வரப்பட்டது தெரியவந்தது. அவற்றை பறிமுதல் செய்ட அதிகாரிகள், சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வார விடுமுறை: தமிழகம் முழுவதும் 687 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, மார்ச்.22

அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் ஆர். மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் இருந்து இதர இடங்களுக்கு வார விடுமுறை நாட்களை முன்னிட்டு கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் இருந்து பயணிப்பார்கள். அதே போன்று பிற இடங்களில் இருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணிப்பார்கள்.

இதனை கருத்தில் கொண்டு, சென்னை கிளாம்பாக்கத்தில்இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 21ந் தேதி (இன்று)வெள்ளிக்கிழமை 270 பஸ்களும், 22ந் தேதி (நாளை) சனிக்கிழமை 275 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 21ந் தேதி வெள்ளிக்கிழமை மற்றும் 22ந் தேதி சனிக்கிழமை தலா 51 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மாதாவரத்தில் இருந்து 21 மற்றும் 22ந் தேதிகளில் தலா 20 பஸ்களும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. மேலும், ஞாயிற்றுக்கிழமைசொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மனைவி தனிமையில் ஆபாச படங்களை பார்க்கிறார்: விவாகரத்து கோரிய கணவர் அதிரடி தீர்ப்பு கூறிய நீதிபதிகள்

மதுரை, மார்ச்.22

கரூர் மாவட்டத்தை சேர்ந்த ஒருவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த வழக்கில் கூறியிருந்ததாவது:

எனக்கும், எங்கள் பகுதியை சேர்ந்த பெண்ணுக்கும் கடந்த 2018ம் ஆண்டில் திருமணம் நடந்தது. எங்களுக்கு குழந்தை இல்லை. இந்த நிலையில் கடந்த 2020ம் ஆண்டில் இருந்து நாங்கள் தனித்தனியாக வசிக்கிறோம். எங்களை சேர்த்து வைக்கக் கோரி என் மனைவி கரூர் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்தார். ஆனால் நான் விவாகரத்து கேட்டு மற்றொரு வழக்கு தொடர்ந்தேன்.

இவற்றை விசாரித்த கரூர்கோர்ட்டு, என்மனைவியின் கோரிக்கையை அனுமதித்தும், என்னுடைய விவாகரத்து வழக்கை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டது. இது ஏற்புடையதல்ல. என் வழக்கை தள்ளுபடி செய்ததை ரத்து செய்யவேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கை நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பூர்ணிமா ஆகியோர் விசாரித்து பிறப்பித்த உத்தரவு வருமாறு:

மனுதாரருக்கும், அவருடைய மனைவிக்கும் நடந்த திருமணம் இருவருக்குமே 2வது திருமணமாகும். அவர்கள் இருவரும் 2 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்துள்ளனர்.

திருமணத்துக்கு பின்பு மனுதாரர் தன் மனைவி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளார்.அதாவது, அவருடைய மனைவிக்கு பாலியல் நோய் இருக்கிறது. வீட்டில் எந்த வேலையும் செய்வதில்லை. மாமியாரை துன்புறுத்துகிறார். தனிமையில் ஆபாச படங்களை பார்த்து சுயஇன்பம் அனுபவிக்கும் பழக்கம் உள்ளது என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார்.

மனுதாரரைப் பொறுத்தவரை, அதில் உண்மை இல்லாவிட்டால் எந்த கணவரும் அத்தகைய குற்றச்சாட்டை முன்வைக்க மாட்டார்கள். ஆனால் அவரது மனைவியோ இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் உண்மையில்லை என்கிறார்.

பாலியல் நோயால் பாதிக்கப்பட்டவருடன் குடும்பம் நடத்தியதால் தனக்கும் நோய் பரவியதாக கூறுவதற்கான எந்த ஆதாரத்தையும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. தனிப்பட்ட முறையில் ஆபாச படத்தை மனுதாரரின் மனைவி பார்ப்பதாக கூறுவதை மனுதாரருக்கு எதிரான கொடுமையாக எடுத்துக்கொள்ள முடியாது. திருமணத்துக்கு பின்பு ஒரு பெண், கணவனை தவிர மற்றவருடன் பாலியல் உறவு கொண்டால், அது விவாகரத்துக்கான காரணமாகும். இருப்பினும், திருமணமான பெண் சுய இன்பத்தில் ஈடுபடுவது திருமணத்தை முறித்துக்கொள்ள ஒரு காரணமாக இருக்க முடியாது. கற்பனையில் கூட, அது கணவருக்கு கொடுமையை ஏற்படுத்துவதாகக்கூற முடியாது.

இந்த வழக்கில் மனுதாரர் கூறிய குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை, உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே மனுதாரர் வழக்கில் கீழ்கோர்ட்டு பிறப்பித்த உத்தரவை உறுதி செய்கிறோம். மனுதாரரின் இந்த மனுவை தள்ளுபடி செய்கிறோம்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# சென்னை: ரெயிலின் அபாயச் சங்கிலியில் பையை தொங்கவிட்ட இளைஞர்... பலர் கடும் அவதி

சென்னை மார்ச்.22

சென்னை கொருக்குப்போட்டை வழியாக ரெயில் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அந்த ரெயிலில் நூற்றுக்கணக்கான பயணிகள் பயணம் செய்தனர். இந்தநிலையில் வட மாநிலத்தை சேர்ந்த ஒருவர் தனது பையை ரெயிலில் உள்ள அபாயச் சங்கிலியில் தொங்க விட்டுள்ளார். இதனால் ரெயில் உடனடியாக கொருக்குப்பேட்டையில் நிறுத்தப்பட்டது.

இது குறித்துதகவலறிந்த ரெயில்வே போலீசார் சம்பவம்நடந்தபெட்டிக்கு விரைந்தனர். அப்போது அந்தவடமாநிலஇளைஞர் விசாரணைக்கு பயந்து ரெயிலில் இருந்து இறங்கி தப்பி ஓடியதாக அங்கு இருந்தவர்கள் அதிகாரிகளிடன் கூறியுள்ளனர். இந்த சம்பவத்தால் 45 நிமிடங்கள் காலதாமதம் ஏற்பட்டது.



இதனால்அந்தரெயிலில் பயணித்த நூற்றுக்கணக்கான பயணிகள் பெரும் அவதி அடைந்தனர்.

இந்த ரெயில் செல்வதற்காக அப்பகுதியில் கேட் அடைக்கப்படிருந்தது. இதனால் பல வாகன ஓட்டிகளும் இந்த சம்பவத்தால் பெரும் அவதி அடைந்தனர். இதனையடுத்து ரெயிலின் அபாயச் சங்கிலியில் பையை தொங்கவிட்ட வட மாநில இளைஞரை ரெயில்வே போலீசார் தேடி வருகின்றனர்.

# 'பிளாஸ்ட்' 'எல் 2 எம்புரான்' பட டிரெய்லரை பார்த்த அனிருத் பதிவு|'



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் மோகன்லால். இவர் தற்போது 'லூசிபர்'படத்தின் 2ம் பாகத்தில் ந்டித்து முடித்துள்ளார். இந்த படத்திற்கு 'எல் 2 எம்புரான்' என பெயரிடப்பட்டுள்ளது. இதில் மோகன்லாலுடன், பிருத்விராஜ், மஞ்சுவாரியர், டோவினோ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர்.

இப்படம் தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் வரும் 27ம் தேதி வெளியாகவுள்ளது. இதற்கிடையில், பிருத்விராஜ் இயக்கியுள்ள இப்படத்தின் டிரெய்லர் நேற்று வெளியானது. இந்த டிரெய்லரை முன்னதாக ரஜினிகாந்த் பாராட்டினார். இந்நிலையில், அனிருத்தும் பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

இது தொடரபாக அவர் பகிர்ந்த பதிவில், 'எம்புரான்' டிரெய்லர் பிளாஸ்ட். மோகன்லால், பிருத்விராஜ் மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துகள்' என்று தெரிவித்திருக்கிறார்.


# விக்ரமின் 'வீர தீர சூரன்' டிரெய்லர் வைரல்




சேதுபதி, சித்தா' படங்களை இயக்கிய பிரபல இயக்குனர் அருண்குமார் இயக்கத்தில் விக்ரம், 'வீர தீர சூரன்' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடிக்கின்றனர். இந்த படத்தை எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபு தயாரிக்கிறார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கிறார்.

இப்படம் இரண்டு பாகங்களாக உருவாகும்நிலையில், முதலில் இரண்டாம் பாகம் வெளியாக உள்ளது. இப்படம் வரும் 27ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி இருக்கிறது.

இத்திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா நேற்று இரவு ஆவடி வேல் டெக் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில், படக்குழுவினர் அனைவரும் கலந்துகொண்ருந்தனர். தற்போது வெளியாகி இருக்கும் இந்த டிரெய்லர் இணையத்தில் வைரலாகி வருகிறது.



# மீண்டும் இந்தி படத்தில் நடிக்கும் கீர்த்தி சுரேஷ்...?

தமிழ் மற்றும் தெலுங்கில் முன்னணி நடிகையாக இருந்து வருபவர் நடிகை கீர்த்தி சுரேஷ். இவரது நடிப்பில் தமிழில் கடைசியாக ரகு தாத்தா என்ற படம் வெளியானது. அதையடுத்து ஹிந்தியில் அவர் நடித்த முதல் படமான பேபி ஜான் வெளியானது. தெறி படத்தின் ரீமேக்கான இந்த படத்தில் கொஞ்சம் கிளாமர் ஹீரோயினாகவும் தலை காட்டினார் கீர்த்தி சுரேஷ். அதையடுத்து அவருக்கு திருமணம் நடைபெற்ற நிலையில் இதுவரை அவர் புதிய படங்களில் கமிட்டாகவில்லை.

தற்போது அவர் அக்கா என்ற ஒரு வெப்சீரிஸில் நடித்திருக்கிறார். இது நெட்பிளிக்ஸ் ஒடிடி தளத்தில் வெளியாக உள்ளது. வரலாற்று கதையில் உருவாகியுள்ள இந்த அக்கா வெப் சீரிஸின் டீசர் சமீபத்தில் வெளியானது. இந்த நிலையில் அடுத்தபடியாக இந்தியில் இருந்து ஒரு ரொமாண்டிக் காமெடி படத்தில் நடிப்பதற்கும் கீர்த்தி சுரேஷ்க்கு வாய்ப்பு வந்துள்ளதாம். அப்படத்தில் நடிப்பது குறித்த பேச்சுவார்த்தையில் அவர் ஈடுபட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# ஜீத்து ஜோசப்பின் மிராஜ் படப்பிடிப்பு நிறைவு...!

மலையான சினிமாவின் முன்னணி இயக்குனர்களில் ஒருவர் ஜீத்து ஜோசப். இவர் 2010ம் ஆண்டு 'மம்மி & மீ' என்ற திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானார். நடிகர் மோகன்லாலை வைத்து 'நேரு' என்ற திரைப்படத்தை இயக்கி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றார்.

ஜீத்து ஜோசப் 'மிராஜ்' படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் ஆசிப் அலி, அபர்ணா பாலமுரளி நடித்துள்ளனர். 'கூமன்' படத்தின் வெற்றி பிறகு, இப்படத்தில் ஜீத்து ஜோசப் மற்றும் ஆசிப் அலியின் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. நான்காவது முறையாக ஆசிப் அலியுடன் ஜோடியாக நடித்திருக்கிறார் அபர்ணா பாலமுரளி. இப்படத்திற்கு விஷ்ணு ஷ்யாம் இசையமைத்துள்ளார். மிராஜ் படத்தின் திரைக்கதையை ஜீத்து ஜோசப் ஸ்ரீநிவாஸ் அப்ரோல் உடன் இணைந்து எழுதியுள்ளார். ஈ4 எண்டர்டெயின்மெண்ட் தயாரிக்கும் இப்படம் கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாக உள்ளது. ஜீத்து ஜோசப் இயக்கத்தில் உருவாகி வந்த 'மிராஜ்' படப்பிடிப்பு நிறைவு பெற்றுள்ளது. இதனை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆசிப் அலி பதிவிட்டுள்ளார். இதனையடுத்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 'திரிஷ்யம் 3' படத்தில் மூன்றாம் பாகத்தின் வேலைகளை ஜீத்து ஜோசப் துவங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாம்பியன்ஸ் டிராபி:இந்திய அணிக்கு ரூ.58 கோடி பரிசுத்தொகை யார் யாருக்கு எவ்வளவு கிடைக்கும்..?

9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் கடந்த பிப்ரவரி 19ந் தேதி முதல் மார்ச் 9ந் தேதி வரை பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்தது. 8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டி தொடரில் துபாயில் நடந்த இறுதி ஆட்டத்தில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி 3வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

தோல்வியே சந்திக்காமல் சாம்பியன் பட்டத்தை வென்று அசத்திய இந்திய அணிக்கு ரூ.58 கோடி பரிசுத்தொகை வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் (பி.சி.சி.ஐ.) நேற்று அறிவித்தது. வீரர்கள், பயிற்சி குழுவினர், உதவி அதிகாரிகள், தேர்வு குழுவினர் ஆகியோருக்கு இந்த தொகை பகிர்ந்தளிக்கப்படும். ஆனால் யார், யாருக்கு எவ்வளவு தொகை கிடைக்கும் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் இந்த ரூ.58 கோடியில் யார் யாருக்கு எவ்வளவு கிடைக்கும் என்ற விவரத்தை பி.சி.சி.ஐ. செயலாளர் தேவஜித் சைகியா அறிவித்துள்ளார்.

அதன்படி, சாம்பியன்ஸ் டிராபியை வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த வீரர்கள் அனைவருக்கும் தலா ரூ.3 கோடியும், தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீருக்கு ரூ.3 கோடியும், மற்ற துணை பயிற்சியாளர்கள் தலா ரூ.50 லட்சமும், ஆதரவு ஊழியர்கள் தலா ரூ.50 லட்சமும், தேர்வுக்குழு அதிகாரிகள் தலா ரூ. 25 லட்சமும் பெறுவார்கள் என்று சைகியா அறிவித்துள்ளார்.

இதன் மூலம் ரோகித், விராட் என அனைத்து இந்திய வீரர்களும் தலா ரூ. 3 கோடி பரிசுத்தொகை பெற உள்ளார்கள்.

# ஐபிஎல்: சென்னை வந்தடைந்த மும்பை அணியினர்

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் வருகிற 22ம் தேதி தொடங்குகிறது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, கொல்கத்தா நைட் ரைட்சர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், ராஜஸ்தான் ராயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ், டெல்லி கேப்பிடல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் ஆகிய 10 அணிகள் கலந்து கொள்கின்றன.கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

23ந் தேதி சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடைபெறும் லீக் ஆட்டத்தில் 5 முறை சாம்பியன்களான சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் சந்திக்கின்றன. இந்த நிலையில், இந்த போட்டியில் பங்கேற்பகற்காக மும்பை அணி வீரர்கள் சென்னை வந்தடைந்தனர். விமான நிலையத்தில் மும்பை அணி வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ஐபிஎல்: போட்டி அட்டவணையை மாற்றியமைக்க கொல்கத்தா போலீஸ் வேண்டுகோள்




இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் வருகிற 22ம் தேதி தொடங்குகிறது. இதில்.கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தாநைட் ரைடர்ஸ் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. இந்த நிலையில் போட்டி அட்டவணையை மாற்றி அமைக்க ஐபிஎல் நிர்வாகத்திற்கு கொல்கத்தா போலீசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்..

ஏப்ரல் 6ஆம் தேதி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் இடையிலான ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன்மைதானத்தில்மாலை3.30மணிக்குநடைபெறஇருக்கிறது.. அன்றைய தினம் ராம நவமியாகும். ராம நவமி தினத்தில் கொல்கத்தாவில் பாஜக பேரணி நடத்த இருப்பதாக ஏற்கனவே தெரிவித்துள்ளது. இதனால் கொல்கத்தா முழுவதும் அதிக அளவில் போலீசார் குவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.அதே தினத்தில் போட்டி நடைபெற இருப்பதால் பாதுகாப்பிற்கு போலீஸ் குவிக்க முடியாத நிலை ஏற்படும். இதனால் 6ஆம் தேதி நடைபெற இருக்கும் போட்டியை மற்றொரு தேதிக்கு மாற்றி வைக்க ஐபிஎல் நிர்வாகத்திற்கு கொல்கத்தா போலீசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.